**செய்தி வெளியீடு எண்: 10/03/2021** **நாள்: 20.03.2021**

**பத்திரிக்கை செய்தி**

**விம்கோ நகர் மெட்ரோ இரயில் நிலையத்தில் இன்று (20.03.2021) வாக்களிப்பதன் அவசியம் மற்றும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்த பல்சுவை விழிப்புணர்வுக் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், பொது மக்களுக்கும் மெட்ரோ இரயிலில் பயணிக்கும் பயணிகளுக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஒரு பகுதியாக, மெட்ரோ இரயிலில் பயணம் செய்வது எவ்வளவு பாதுகாப்பானது என்பதைப் பயணிகளுக்கு தெரிவிக்கும் வகையில் மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு தொடர்பான பல்சுவை விழிப்புணர்வுக் கலைநிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. மேலும், நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தல் 2021-இல் வாக்களிப்பதன் அவசியம் குறித்த பல்சுவை விழிப்புணர்வுக் கலைநிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ‘ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை’ கலைக்குழுவினருடன் இணைந்து இன்று (20.03.2021) விம்கோ நகர் மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) மெல்லிசை விழிப்புணர்வுக் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து இந்நிகழ்ச்சியினை கண்டு களித்தனர்.

இதனைத் தொடர்ந்து, நாளை 21.02.2021 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ‘நிமிர்வு கலையகம்’ அமைப்புடன் இணைந்து நடத்தும் வாக்களிப்பதன் அவசியம் மற்றும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்த பல்சுவை விழிப்புணர்வுக் கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

சென்னை மாநகரில் வசிக்கும் மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள், மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு மற்றும் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வுக் கலைநிகழ்ச்சிகளை கண்டுகளித்து விழிப்புணர்வுடன் இருக்குமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**